தினமணி

# அஞ்சலகப் பணி நேரம்: எளிதில் அறிய வசதி

Author: dn


- First Published: Dec 4, 2014 4:51 AM
- Last Updated: Dec 4, 2014 4:51 AM


**அஞ்சலகப் பணி நேரம், தொலைபேசி எண் ஆகிய விவரங்களை அறிய இணையதளம் மூலம் வசதி செய்யப்பட்டுள்ளது.**

அஞ்சலகப் பணி நேரம், தொலைபேசி எண் ஆகிய விவரங்களை அறிய இணையதளம் மூலம் வசதி செய்யப்பட்டுள்ளது.

சென்னை நகர மண்டல அஞ்சல் வட்டத்தின் கீழ், 20 தலைமை அஞ்சலகங்கள், 551 துணை அஞ்சலகங்கள், 1,646 கிளை அஞ்சலகங்கள் உள்ளன. பெரும்பாலும், இந்த அஞ்சலகங்களின் பணி நேரம், தொலைபேசி எண் போன்ற விவரங்களை அறிந்துகொள்வதில் பொதுமக்களுக்கு சிரமம் ஏற்பட்டது.

இதைத் தவிர்க்கும் வகையில், தற்போது அவற்றின் விவரங்களை சென்னை நகர மண்டல அஞ்சல் வட்டம் தனது இணையதளத்தில் வெளியிட்டுள்ளது.பொதுமக்கள் தங்கள் பகுதியின்கீழ் செயல்படும் அஞ்சலகங்களின் பணி நேரம், தொலைபேசி எண் ஆகியவற்றை chennaipost.gov.in என்ற இணையதளம் மூலம் அறிந்து கொள்ளலாம்.

Copyright © 2012, The Dinamani.com. All rights reserved.